2009 பிப்ரவரி 23]

அவர்கள் நேரடியாகச் சென்று, அது மிகவும் பழுதடைந்திருப்பதால், கட்டப்பட வேண்டுமென்று 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். ஆனால், அந்தப் பணி நடைபெறவில்லை. இப்போது, இடிந்து விழுந்தால் உயிரிழப்பு ஏற்படும் அபாய நிலையில் அது உள்ளது. இதுகுறித்து அமைச்சர் அவர்களிடமும் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, அதற்கு நிதியினை ஒதுக்கி, அந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து, திருப்பணி செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

48—

வரலாற்றுச் சின்னம்

***29787—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதிக் கோட்டையை வரலாற்றுச் சின்னமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி கட்டபொம்மன் கோட்டை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசால் அறிவிக்கப்பட்டு,

மாநிலத் தொல்லியல் துறையின்கீழ் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக முதன்முதலாகத் தமிழகத்திலே குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களும், அவருடைய படைத் தளபதிகளாக இருந்த வெள்ளையத் தேவன், சுந்தரலிங்கம், பூலித் தேவன் ஆகியோரும், அன்றைய தினம் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடுவதற்காக இராமநாதபுரம் சேதுபதி மன்னரிடத்திலே ஆதரவு கேட்டுப் பெறுகின்ற நேரத்தில், கமுதி கோட்டைமேடு என்று சொல்லப்படுகின்ற அந்தக் கோட்டையில், அன்றைய தினம் படைத் தளம் அமைத்து, வெள்ளையர்களை எதிர்ப்பதற்காக அந்த இடத்திலேயிருந்து போரிட்டார்கள். அந்த இடம் இப்பொழுது சிதிலமடைந்து, அந்த வரலாற்றுச் சின்னம் மறைக்கப்பட்டு, சாதாரணமாக கோட்டைமேடு என்று சொல்லுகின்ற அளவிற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த இடத்தைப் பராமரித்து, நவீனப்படுத்தி, அதனை ஒரு வரலாற்றுச் சின்னமாக ஆக்க, இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலேயே, கமுதிக் கோட்டை தமிழக அரசினுடைய தொல்லியல் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, வரலாற்றின் அடிப்படையில் வீரபாண்டிய கட்டபொம்மன், 1798 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் இராமநாதபுரத்திற்குச் செல்லக்கூடிய வழியிலே கமுதிக் கோட்டைக்கு வந்ததாக ஒரு செய்தியிருக்கிறது. ஆனால், அங்கே அவர் எந்தப் போரிலும் ஈடுபட்டதாக இதுவரை செய்தியில்லை. அங்கே வந்ததாக செவிவழிச் செய்தி உண்டு. ஏறத்தாழ, 294 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2009 பிப்ரவரி 23]

அந்தக் கோட்டை, அதனுடைய வரலாற்றுப் பின்னணி, அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, 12-வது நிதிக் குழு மானியத்தினுடைய அடிப்படையில் 14.60 இலட்சம் ரூபாய் செலவில், அந்தக் கோட்டையிலே இருக்கக்கூடிய பல்வேறு பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு நிதி ஒதுக்கி, பொதுப் பணித் துறையின்மூலம் இப்பொழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன்வாயிலாக அங்கே இருக்கக்கூடிய அஸ்திவாரத்தைப் பலப்படுத்தக்கூடிய முயற்சி, ஆங்காங்கே உருவாகியிருக்கக்கூடிய முட்புதர்களை அகற்றக்கூடிய முயற்சி, சிதிலமடைந்திருக்கக்கூடிய மேல் பகுதியை அகற்றக்கூடிய முயற்சிகளெல்லாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, அந்தக் கோட்டையை நல்ல முறையிலே பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசின் தொல்லியல் துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதிக்கு அருகிலே இருக்கின்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய நினைவிடத்திற்கு, ஆண்டுதோறும் அக்டோபர் 28, 29 மற்றும் 30 ஆம் தேதிகளில் நம்முடைய தமிழகத்திலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும், பல்வேறு இடங்களில் இருந்தும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், இயக்கங்களும், பொது மக்களும் அங்கே வருகின்ற நேரத்தில், அதற்கு அருகிலே இருக்கின்ற அந்தக் கோட்டைமேடு பகுதியை வரலாற்றுச் சின்னமாக ஆக்குகின்ற நேரத்தில், அதனுடைய வரலாற்றையும், அந்தப் பகுதியினுடைய சிறப்பையும் வருகின்ற அனைவரும் அறிவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, வருகின்ற நிதியாண்டிலேயே அந்தக் கோட்டைமேடு பகுதியை ஒரு வரலாற்றுச் சின்னமாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஏற்கெனவே வரலாற்றுச் சின்னமாகத்தான் இருக்கிறது.

எனவேதான் அதற்காகக் கூடுதல் நிதியைப் பெற்று, 12–வது நிதிக் குழுவின் அடிப்படையில் அங்கே பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். தேவர் திருமகனுடைய நினைவிடத்திலே அஞ்சலி செலுத்துவதற்கு பல்லாயிரக்கணக்கானோர் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருகிறார்கள். இந்தக் கமுதிக் கோட்டையினுடைய வரலாற்றை, அதனுடைய பின்னணியினைத் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் அங்கே கூடுதலாக அறிவிப்புப் பலகைகளை நிறுவுவதற்கும், ஏனைய வசதிகளைச் செய்து தருவதற்கும் துறையின் சார்பாக நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்க்கைப்பட்டு, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு, சகோதரர் வீட்டுக்கு வந்தபோது அண்ணியால் விரட்டப்பட்ட நல்லதங்காள் வரலாறு, ஏழு குழந்தைகளோடு கிணற்றிலே விழுந்த அந்த வரலாறு, இன்றைக்குத் தமிழர்கள் மத்தியில் உள்ளது. நல்லதங்காள் ஏழு குழந்தைகளுடன் கிணற்றிலே விழுந்து, தற்கொலை செய்துகொண்ட அந்தக் கிணறும், அதற்கு அருகிலிருக்கின்ற கோயிலும் எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அருகிலுள்ளன. அந்தக் கிணற்றையும், கோயிலையும் அரசு கையகப்படுத்தி, அதை ஒரு வரலாற்று நினைவிடமாகக் கொண்டுவருவதற்கு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நல்லதங்காள் கதை ஒரு புராணக் கதை; செவிவழிக் கதை, கட்டுக் கதை. அதுவும் நம் நாட்டிலல்ல. வடநாட்டிலே காசிராஜனுடைய தங்கச்சிதான் நல்லதங்காள். ஆகையால், வட நாட்டிலே நடந்த கதையை, தமிழ்நாட்டிலே யாரோ நான்கு பேர், ஒரு கிணறைக் காட்டி, இது நல்ல தண்ணீர் கிணறு என்று சொல்லியிருப்பார்கள்; அது நல்லதங்காள் கிணறாகி, அதையும் இப்போது வரலாற்றுச் சின்னமாக ஆக்க வேண்டுமென்பது வேடிக்கை.